ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1783/24 - 2012 නොවැම්බර් මස 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.11.08

*1783/24 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் மாவனெல்ல பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டமையால் மாவனெல்ல பிரதேச சபையின் தவிசாளரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், திரு. பி. பீ. இந்துனில் ஷாந்த குணசேன எனும் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான, மாவனெல்ல பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. கோரலே கெதர பியதிஸ்ஸ என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது மாவனெல்ல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தலங்கம அப்புஹாமில்லாகே சமிந்த நாமல் தலங்கம ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. கோரலே கெதர பியதிஸ்ஸ என்பவர் மாவனெல்ல பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டீ. ஏ. சீ. என். தலங்கம,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மாவனெல்ல பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கேகாலை,
2012, நவெம்பர் 06.

11 – 867

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)**

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

**தெஹியோவிட பிரதேச சபை**

*தெஹியோவிட பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. பிரியந்த உதய குமார அவர்களின் , ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு கட்சியின் உறுப்பினராகும் தகுதி நிறுத்தி விடப்பட்டுள்ளதால் அச்சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென தெஹியோவிட பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தலங்கம அப்புஹாமிலாகே சமிந்த நாமல் தலங்கம ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*டீ. ஏ. சீ. என். தலங்கம,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*தெஹியோவிட பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*கேகாலை,*
*2012, நவெம்பர் 05.*

*11 - 868*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*